# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2268/89 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25

2268/89 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 21/1978 (X) (அ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PV 66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிடெட் (KIU) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 2196/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஐ, அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "தாதியியலில் தத்துவவியல் முதுமாணி" என்னும் பதிவை உடனடுத்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, அதற்கான அட்டவணை II இன் முறையே நிரல்கள் I மற்றும் II இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன்மூலமும் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

1. காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிடெட் (KIU) ஆனது, மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு, கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (SLQF மட்டம் 6) என்பன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துடன் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்:-


1A - PG 5759 — 510 (2022/02)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானம் என்ற விடயத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் ("S") அல்லது அதற்குச் சமமான தகைமை; அல்லது

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரேதடவையில் ஏதேனும் விடயத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் ("S") அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக் கற்கைநெறியொன்றுடன் அதற்குச் சமமான தகைமை.

2. காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவெட்) லிமிடெட் (KIU) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (05) ஆண்டு மீள்பரிசீலனைக்கமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

### அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) மென்பொருள் பொறியியல் |
| கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) கணினி வலையமைப்புகள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு |
| முகாமைத்துவத் தகவல் முறைமையில் விஞ்ஞான இளமானி சிறப்பு | பீஎஸ்சீ (சிறப்பு) முகாமைத்துவத் தகவல் முறைமை |

**தினேஷ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
2022, பெப்புருவரி 23.

EOG 02-0661

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.